# செயற்பொறியாளர் அலுவலகம் பொபது/ நீஆது, முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் கோட்டம் காரைக்குடிஅவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : பொறி.ப.செல்வராஜன், எம்.இ.,
செயற்பொறியாளர்,பொபது/நீஆது.,

**செயல்முறைஆணைஎண் இ2/(980/2018)/2019/நாள்.11 .04.2019**

பொருள் : பணியமைப்பு - பொதுப்பணித துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.மோ.ஜஸ்டின் சாமுவேல். (பிறந்த தேதி.07.05.1977) த/பெ. காலஞ்சென்ற திரு.ஜே.மோசஸ் - இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பணிவரன்முறை செய்து - ஆணை வழங்குதல்- தொடர்பாக.

பார்வை :
1) முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களது கடித எண். எஸ்3(5)/ 95932/ 99/ நாள்.11.01.2001.
2) செயற்பொறியாளர்,பொபது/நீஆது., முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் கோட்டம், காரைக்குடி அவர்களின் கடித எண்.517(333)/2017/இ2/நாள்.27.12.2017
3) செயற்பொறியாளர்,பொபது/நீஆது., முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் கோட்டம், காரைக்குடி அவர்களின் கடித எண்.296/ இ2/2018/நாள்.15.05.2018
4) தலைமைப் பொறியாளர், பொபது/நீஆது., மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கடித எண்.அ2/1582/2018/நாள்.25.07.2018.
5) அரசு கடித எண்.17770/பி1/2018-2/ நாள்.19.11.2018.
6) அரசு ஆணை (நிலை)எண்.80 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ 1)த் துறை நாள்.02.03.2016.

(((())))

பார்வை (1)-ல் காணும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களது செயல்முறை கடிதத்தின்படி கருணை அடிப்படையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி பொது விதி 10 (எ) (1)-ன் படி இளநிலை உதவியாளராக திரு.மோ.ஜஸ்டின் சாமுவேல் 26.02.2001மு.ப முதல் முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் உபகோட்டம், தேவகோட்டை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

தனியர் பணியேற்பு செய்ததைத் தொடர்ந்து பார்வை 2-ல் காணும் கடிதத்தின் வாயிலாக பணியினை பணிவரன்முறைப்படுத்த கோரிய கருத்துரு அரசுக்கு உரிய வழிமுறையாக

த.பி.பா..

அனுப்பப்பட்டு குறைகள் காரணமாக திருப்பப்பட்டது. பார்வை 3-ல் காணும் கடிதத்தின் வாயிலாக குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு கருத்துரு அரசுக்கு உரிய வழிமுறையாக அனுப்பப்பட்டு பார்வை 4-ல் காணும் தலைமைப் பொறியாளர், பொபது/நீஆது., மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கடிதத்தின் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கருத்துருவை அரசு பரிசீலனை செய்து பார்வை 5-ல் காணும் அரசு கடித எண்ணில் பார்வை 1-ல் காணும் அரசாணையின் பத்தி 6-இல் 6-1 மற்றும் 6.2 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி உரிய நடவடிக்கை எடுத்து கருத்துருவை மீண்டும் அரசுக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| பெயர் மற்றும் பதவி | பிறந்த தேதி | இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| திரு.மோ.ஜஸ்டின் சாமுவேல் இளநிலை உதவியாளர் | 07.05.1977 | 26.02.2001மு.ப | 26.02.2001மு.ப முதல் |

1) தனியரது பணிப்பதிவேட்டின் படியும் மற்றும் இவ்வலுவலக ஆவணங்களின்படியும் பணிவரன்முறையினை பாதிக்கும் வகையில் இவர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளோ அல்லது ஒழுங்கு நடவடிக்கைகளோ ஏதும் நிலுவையில் இல்லை. ஊதியமில்லா விடுப்பினை தனியர் துய்த்துள்ளார்.
2) தனியரது இளநிலை உதவியாளர் பணி, பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசு விதித்தளர்வு வேண்டி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16(b)-ன் கீழ் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் பொருட்டு உரிய முன்மொழிவுகள் நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.
3) மேலும், இப்பணிவரன்முறை ஆணை தொடர்பாக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திலிருந்து அல்லது முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களிடமிருந்தோ ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டால் இப்பணிவரன்முறை ஆணை உடனடியாக இரத்து செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு திரு.மோ.ஜஸ்டின் சாமுவேல், இளநிலை உதவியாளரது பணியானது பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பெறுநர்:
திரு. மோ. ஜஸ்டின் சாமுவேல்,
இ.நி.உ, பொபது/நீஆது.
மு.ஜ.க.த.உ. கோட்டம்,
தேவகோட்டை.

(ஒ/-) 11/4/19

செயற்பொறியாளர், பொபது/நீஆது.,
முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் கோட்டம்,
காரைக்குடி

காஅ 11/4/19

நகல்: முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீஆது, மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
நகல்: தலைமைப் பொறியாளர், பொபது/நீஆது, மதுரை மண்டலம், மதுரை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
நகல்: கண்காணிப்பு பொறியாளர், பொபது/நீஆது, கிருதுமால் வைகை வட்டம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.